மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆங்காங்கு உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்கள் இவற்றின் உதவி பெற்றும், பொது மக்கள் தருகிற நன்கொடையையும் சேர்த்து நடத்த வேண்டுமென்ற திட்ட அடிப்படையில்தான் நடைபெறுகிறது. அதற்கு அரசாங்கம் ஆறு காசு வீதம் தருகிறது. மொத்தம் பத்து காசில் நடைபெறமுடியாது. 'கேர்' நிறுவனம் தருகிற உணவுப் பொருள்களைக் கொண்டு ஓரளவு கட்டுபடியாகும் சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. இதனால் ஆசிரியர்களுக்கு சங்கடங்கள் ஏற்படுகின்றன, அவர்கள் சமையல் செய்வது, மேற்பார்வை இடுவது, எல்லாவற்றையும் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு இவற்றின் காரணமாக ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள தொல்லை இந்த 'கேர்' நிறுவனம் செய்துவரும் உதவியால் இப்போது நீங்குகிறது. அவர்கள் இரண்டு லட்சம் ரூபாய் செலவில் மைய உணவுக் கூடங்களைக் கட்டித் தருகிறார்கள். தொடராச் செலவு ரூபாய் இரண்டு லட்சம். அவர்கள் அதை ஏற்றுக்கொள்கிறார்கள். தொடரும் செலவு ரூ. 17,000 ஒரு கூடத்திற்கு ஆகிறது. அதை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. அந்த அளவில் இப்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அவர்கள் அளிக்கும் உதவிகளால் நம் வசதிகள் கூடக்கூடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 266, 267, 268 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

மதுரையில் பின்நிலை வகுப்புக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி

***269 வினா—திருமதி கே. பி. ஜானகியம்மாள் :** மாண்புமிகு பின்நிலை வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, ஷெனாய் நகரில் 1969 அக்டோபரில் பின்தங்கிய கல்லூரி மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் திறக்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், இதுவரை அந்த ஹாஸ்டலில் தங்கி கல்லூரிக்குப் படிக்கச் செல்லும் மாணவர்கள் எத்தனை பேர்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவரவர்களே, மதுரை ஷெனாய் நகரில் கடந்த அக்டோபரில் பின்தங்கிய மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் திறந்தார்கள். அதில் பின்தங்கிய மாணவர்களில் பலர் இதுவரை போதுமான அளவு ஹாஸ்டலில் தங்க விரும்பவில்லை என்று அறிகிறேன் காரணம், அங்கே இருக்கும் மாணவர்களுக்கு போதிய அளவு ஹாஸ்டலில் தங்குவதற்கான வசதி, சாப்பாடு பணம் தராத காரணத்தால் சேர விரும்பவில்லை. ஆகவே, இதற்காக மத்திய அரசாங்கத்திலிருந்து பணத்தைக் கேட்டு வாங்கி பின்தங்கிய மாணவர்களுக்கு வேண்டிய வசதி செய்துதர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என் வி. நடராசன் : மதுரை ஷெனாய் நகரில் பின்தங்கிய வகுப்பு மாணவர்களுக்கு இதுவரை ஹாஸ்டல் திறக்கப்படவில்லை. அப்படி திறக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்படும்போது மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த கருத்தை நினைவில் வைத்து ஆவன செய்யப்படும்.